# மெட்ரோ நிலைய நுழைவாயில்கள் திறப்பு

**சென்னை, நவ. 20–** பயணியரின் வசதிக்காக, மெட்ரோ ரயில் நிலையங்களின் அனைத்து வாயில்களும் திறக்கப்பட்டுள்ளதாக, அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

கொரோனா தொற்று ஊரடங்கு விதிகள், படிப்படியாக தளர்த்தப்பட்ட நிலையில், செப்., 9ம் தேதி முதல், சென்னை மெட்ரோ ரயில்கள் இயங்கத் துவங்கின.

கொரோனா பரவலைத் தடுக்கவும், பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளவும், அரசு விதித்துள்ள நடைமுறைகள், மெட்ரோ ரயிலிலும், ரயில் நிலையத்திலும் பின்பற்றப்பட்டன.

மேலும், பாதுகாப்பு காரணமாக, ரயில் நிலையங்களில் குறிப்பிட்ட நுழைவாயில்கள் மட்டும் திறக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வந்தன.

தற்போது, பயணியரின் வசதிக்காக, ரயில் நிலையத்தின் அனைத்து நுழைவாயில்களும் திறக்கப்பட்டுள்ளன.

இதை, பயணியர் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக, மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.